1972 ஏப்ரல் 1]

திரு. கே. என். குமாரசாமி: பாரபின்னுக்கு மூலப் பொருள்கள் என்னென்ன என்பதை அரசு அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மெட்ராஸ் ரிபைனரியிலிருந்து கிடைக்கப்படும் சில பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. தென் இந்திய மாநிலங்களிலும், அஸ்ஸாமிலும் இது போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் இதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். மெட்ரூஸ் ரிபைனரியில் கிடைக்கக்கூடிய உபபொருள்களைக் கொண்டு இது உற்பத்தி செய்யப்படும்.

கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கம்

*824 வினு.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் தற்போது எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எட்டு.

திரு. கே. எ. வகாப்: இந்த எட்டு இடங்களிலுள்ள கைவினைப் பொருள்கள் நிலையங்களில் டெல்லி, வேலூர் ஆகிய இடங்களைத் தவிர, மற்றவைகளெல்லாம் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்பது உண்மையா? அதுமட்டுமல்ல. இவற்றிற்கான மூலதனத்திற்காகத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ ரூ. 10 லட்சம் கடனைப் பெற்று இருப்பதால், அவைகள் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன என்பது அரசுக்கு தெரியுமா? அதற்கு என்ன பரிகாரம் காணப் போகிறது இந்த அரசு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிட்டத்தட்ட ஆறு எம்போரியங்களில் லாபம் என்ற கணக்கு இருக்கிறது. லாபத்தையெல்லாம் விழுங்குகின்ற முறையிலே தலைமை சொஸைடியாக விளங்குகின்ற அமைப்பிலே ரூ. 5,99,564 நஷ்டம் என்று இருக்கிறது. பொதுவாக இதை எப்படிச் சீர்படுத்துவது என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

தீக்குச்சித் தொழிற்சாலைகள்

*825 வினு.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் தீக்குச்சி தொழிற்சாலைகள் எத்தனை?

(இ) அவை யாவை?